மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை.
முன்னிலை: திரு.செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10–ம் நாள் திங்கள்கிழமை.
இடைநிலை மனு எண்.1/2023
இன்
அசல் வழக்கு எண்.4/2023

கந்தசாமி ....மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

பெரியசாமி ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 12.04.2024 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு. T. R. பாஸ்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ், மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக 14.08.2023 தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்

எதிர்மனுதாரர் / வாதி மனுதாரர் மீது தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் மனுதாரர் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய 14.08.2023–ம் தேதி வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும், இந்த விபரம் தனக்கு தனது வழக்கறிஞர் போன் மூலம் தெரிவித்திருந்தார் என்றும், திடீரென தனது மனைவி இறந்துவிட்ட படியால், நான் அதன் காரணமாக 2 மாத காலமாக மன நிம்மதி இல்லாமல் இருந்துவந்ததால் தன்னால் எதிர்வழக்குரையை 14.08.2023–ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:50:57 +0530

முடியாமல் போய்விட்டது என்றும், எனவே மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக 14.08.2023 தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரியும், எதிர்வழக்குரையுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச நிலைக்கு வைக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

6. தீர்வு

அசல் வழக்கை பரிசீலித்ததில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்பதும், எதிர்மனுதாரர்/வாதி பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதும் அதில் 24.03.2023 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும், பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகததால், அசல் வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக 14.08.2023 ம் தேதி ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளது வழக்கு கட்டினை பரிசீலிக்கையில் தெரியவருகிறது. மனுவில் மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ள காரணமான திடீரென தனது மனைவி இறந்துவிட்ட படியால், 2 மாத காலமாக மன நிம்மதி இல்லாமல் இருந்துவந்ததால் தன்னால் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், கூறியுள்ளதை ஆராய்கையில், பிரதிவாதி/மனுதாரர் இவ்வழக்கின் தீர்ப்பிணை தீர்மானிக்க முக்கியமான தரப்பினர் என்று கருதியும், அவர் தரப்பில் அவரது கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் பொருட்டு நலம் என்று கருதியும், இம்மனுவுடன் சேர்த்து எதிர்மனுதாரர் தனது எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ள நிலையில், மனுவை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததாலும், மனுவை அனுமதிக்கலாம் என நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:51:04 +0530

ஜீன் மாதம் 10-ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:51:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:51:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.